# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

## காலாண்டுத் தேர்வு 2022 – 2023

வகுப்பு : 10 மாதிரித்தேர்வு - 1 நேரம் : 3.00 மணி

பாடம் : தமிழ் மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**II. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15**

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ……….
   அ. எந் + தமிழ் + நா ஆ. எந்த + தமிழ் + நா
   இ. எம் + தமிழ் + நா ஈ. எந்தம் + தமிழ் + நா
2. “பாடுஇமிழ் பனிகடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ. கடல் நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்
3. பின்வருவனவற்றுள் முறையான தொடர் ……………..
   அ. தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ. தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   இ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   ஈ. தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
4. பெரிய மீசை சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ. பண்புத் தொகை ஆ. உவமைத் தொகை
   இ. அன்மொழித் தொகை ஈ. உம்மைத் தொகை
5. ‘விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு’ இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ………
   அ. நிலத்திற்கேற்ற விருது ஆ. இன்மையிலும் விருந்து
   இ. அல்லிலும் விருந்து ஈ. உற்றாரின் விருந்து
6. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ …… யாரிடம் யார் கூறியது?
   அ. குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ. இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ. மருத்துவரிடம் நோயாளி ஈ. நோயாளியிடம் மருத்துவர்
7. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடப்படும் பாடல்கள் ………..
   அ. திருவெம்பாவை, திருப்பாவை ஆ. பெரியபுராணம், கம்பராமாயணம்
   இ. சிலப்பதிகாரம், மணிமேகலை ஈ. முல்லைப்பாட்டு, காசிக்காண்டம்
8. “பல் பழுப் பலவின் மயங்கெழு கொல்லி” – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் ……….
   அ. புறநானூறு ஆ. காசிக்காண்டம்
   இ. அகநானூறு ஈ. பரிபாடல்
9. கமலாலயன் எழுதிய நூல் …………..
   அ. உன்னால் முடியும் ஆ. தெரிந்தவற்றைக் கூறும் பதுமை
   இ. “உனக்கு படிக்கத் தெரியாது” ஈ. கள்ளிக்காட்டு இதிகாசம்
10. மலேசியாவின் தலைநகர் ………….
    அ. கோலாலம்பூர் ஆ. பினாங்கு இ. மலாக்கா ஈ. சரவாக்
11. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
    அ. நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
    ஆ. ஊரில் விளைச்சல் இல்லாததால்
    இ. அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
    ஈ. அங்கு வறுமை இல்லாததால்

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

நும்இல் போல் நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழிஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குருஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்.

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது?
    அ. பெரியபுராணம் ஆ. கம்பராமாயணம்
    இ. பாரிபாடல் ஈ. மலைபடுகடாம்

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

13. இப்பாடலின் ஆசிரியர் ………………
 அ. கீரந்தையார் ஆ. கம்பர்
 இ. குலசேகராழ்வார் ஈ. பெருங்கௌசிகனார்
14. பரூஉக் இலக்கணக் குறிப்பு தருக.
 அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை
 இ. உம்மைத்தொகை ஈ. சொல்லிசை அளபெடை
15. வேவை பொருள் தருக.
 அ. தினை ஆ. சோறு இ. வேவாதது ஈ. வெந்தது

## பகுதி – II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8**
**(21 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

**16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
 அ. செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
 ஆ, ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
17. முகமன் சொற்களை எழுதுக.
18. வசன கவிதை - குறிப்பு வரைக.
19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்க தொடராக்குக.
20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
21. தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது போன்றது எனப் பொருள் தரும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10**

22. எழுது என்றாள்’ என்பது விரைவு காரணமாக, ‘எழுது எழுது என்றாள்’ என அடுக்குத்தொடரானது ‘சிரித்துப் பேசினார்’ என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?
23. “சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்து கத்துவானே தவிர கடிக்க மாட்டான்” என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.
24. இந்த அறை இருட்டாக இருக்கிறது, மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ …….. இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
25. தொடர்களைஅடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்வாறு மாற்றுக.
 கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
 (கலவைச் சொற்றொடராக மாற்றுக)
26. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
27. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.
 அ. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் …………..
 ஆ. மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ………….
 (சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)
28. கலைச்சொல் தருக.
 அ. Cosmic rays ஆ. Devotional literature

## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
 பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றிது. பின்னர் புவி குளிரும் படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

அ. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
ஆ. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
இ. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

30. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவரேறு சுட்டுவன யாவை?
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. அடிமாறாமல் எழுதுக.

அ. விருந்தினனாக எனத்தொடங்கும் பாடல்.

(அல்லது)

ஆ. புண்ணியப் புலவீர் எனத் தொடங்கும் பாடல்.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

35. ‘கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் நடைபெறுகிறது மலைப்பகுதியில் மலைப் பயிர்களும், நிலப்பகுதிகளில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன. காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.
36. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
சொல்லப் பயன்படும் கீழ் - அலகிட்டு வாய்பாடு தருக.
37. கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டுத் தருக.

### பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 5x5=25**

38. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

‘சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி…
தண்டலை மயில்கள் ஆட ……..
இவ்வுரையைத் தொடர்க!

39. அ. மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ. மதிப்பரை எழுதுக.
பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.
குறிப்பு – நூலின் சிறப்பு – நூலின் மையப்பொருள் - மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக்கூறு – நூல் ஆசிரியர்.

40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.



எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

41. குமரன் மகள் செல்வி என்பவர் தட்டச்சர் பணி வேண்டி தன்விவரப் பட்டியல் ஒன்று தயார் செய்கிறார். அவருடைய பிறந்த தேதி 08.09.2000 ஆகும். 27, அண்ணாநகர், கரூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். தாய்மொழி தவிர ஆங்கிலம், பிரெஞ்சி, ஹிந்தி மொழிகள் அறிந்துள்ள அவர் கணினியில் பி.எஸ்.சி பட்டம் பெற்றுள்ளார். தேர்வர் தன்னைச் செல்வியாகப் பாவித்து தன் விவரப்பட்டியல் ஒன்றை தயார் செய்யவும்.

42. அ. பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் பின்பற்றக் கூடிய நன்னெறிகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

**ஆ. மொழிபெயர்க்க.**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3x8=24**

43. அ. தமிழின் இலக்கியவளம் - கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் தமிழுக்குச் செழுமை மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்க நடுப்பக்கக் கட்டுரைக்கான செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ. காற்று பேசியதுப்போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுக்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.

44. அ. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல் 'அன்னமய்யா' புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை 'கோபல்லபுரத்து மக்கள்' கதை வழி விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ. "பாய்ச்சல்" சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் குறித்தும் விரிவாக எழுதுக.

45. அ. உங்கள் பகுதியில் அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. முன்னுரை – அரசுப் பொருட்காட்சி அறிவிப்பு – அமைவிடம் – அங்காடிகள் – பல்துறைக் கண்காட்சி கூடங்கள் – பொழுது போக்கு விளையாட்டுகள் – பலவித உணவுகள் பெருமித உணர்வு – அரசின் நலத்திட்டங்கள் – பேச்சரங்கம் – நிகழ்த்தப் பெற்ற நிகழ்கலைகள் – முடிவுரை.

(அல்லது)

ஆ. குமரிக் கடல்முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னன் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள் - இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593